Zoology

# RAJAH SERFOJI GOVT. COLLEGE THANJAVUR



Webinar on in connection with

## WORLD ENVIRONMENT DAY

Date & Time
**07.06.2021**
11.00 am to 12.00 noon

Topic & RP:

# MICROPLASTICS




**Dr. P.Kumar**
Department of Animal Health & Management
Alagappa University, Karaikudi TN


Google Meet

Google Meet ID
meg-qyii-yjz

Live @
ZOOLOGY BLACK BOARD

Dr. **M. Sukumaran**
Organizing Secretary

Dr. **P. Mariappan**
Head-Dept of Zoology

Dr. **V. Senthamil Selvi**
Principal

EK BHARAT SHRESHTHA BHARAT

Catalyzed by **IQAC-RSGC**

NAAC
NATIONAL ASSESSMENT AND ACCREDITATION COUNCIL
'A' GRADE

## உலக சுற்றுச்சூழல் தினம். இணையவழி கருத்தரங்கம்

மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியின் விலங்கியல் துறையின் சார்பில் புதுதில்லி பல்கலைக்கழக மானியக் குழுவின் நெறி காட்டுதலின் படி உலகச் சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு நுண் நெகிழி (மைக்ரோபிளாஸ்டிக்) குறித்த இணையவழி கருத்தரங்கு 07.06.2021 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் போது கல்லூரியின் விலங்கியல் துறைத்தலைவர் பி. மாரியப்பன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் செந்தமிழ்செல்வி தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையின் போது சுற்றுச்சூழல் பேணி காப்பதின் அவசியத்தினையும் நெகிழியினை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகளை நாம் உணர்ந்துள்ளதையும் எனவே எங்கெல்லாம் நெகிழியினை தவிர்க்கலாமோ அங்கெல்லாம் தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக விலங்கு சுகாதார மேலாண்மை உதவிப்பேராசிரியர் முனைவர் பி. குமார் நுண்பிளாஸ்டிக்குகள் குறித்துச் சிறப்புரையாற்றினார். உலகம் முழுவதும் உற்பத்தி செய்யப்படும் நெகிழியானது பெரும்பகுதியானது கழிவுகளாக புவியின் மேற்பரப்பில் இடப்படுவதாகவும், குறிப்பாகப் பெருங்கடலில் இவைச் சேர்வதால் அங்கு வாழும் உயிரினங்களை பாதிப்பதை ஆய்வுச்சான்றுகளுடன் விளக்கிக் கூறினார். குறிப்பாக நுண் நெகிழித் துகள்கள் பல்வேறு விளைவுகளை விலங்குகளில் ஏற்படுத்துவதையும் விளக்கினார்.

நிகழ்ச்சியின் முடிவில் விலங்கியல் உதவிப்பேராசிரியர் முனைவர் மா. சுகுமாரன் நன்றி கூறினார். நிகழ்ச்சியினை முனைவர் மெறின் எமரால்டு தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் இணையவழியில் மாணவர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் என 200க்கும் மேற்பட்டோர் இந்தியாவின் பலபகுதியிலிருந்தும் இணையவழியில் கலந்துகொண்டனர்.




